பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 3 (18—12—67) திங்கள் ★ வெளியூர்: மார்கழி 4 (19—12—67) செவ்வாய் [இதழ்: 155

நாடு இரண்டாகப் பிரிகிறது

இந்தி பேசாத மக்களின் உரிமையெல்லாம் பறிபோகிறது

இந்திய நிர்வாகம் முழுவதும் இந்திக்காரர்கள் கையில் சிக்கிவிடும்

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 17—

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவில் மத்திய அரசு ஊழியர் தேர்வு மொழித் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட திருத்தத்தின் மூலம், தென்னாட்டு மக்களுக்கு டெல்லி எந்த அளவுக்கு அநீதி இழைத்திருக்கிறது என்பதையும், அதே நேரத்தில் இந்தி பேசும் மக்களுக்கு எந்த அளவுக்குச் சலுகை வழங்கியிருக்கிறது என்பதையும், நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் அன்பழகன், மற்றும் க. இராசாராம், பி. இராமமூர்த்தி (கம்யூ) ஆகியோர் எடுத்துக்காட்டிக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

க. அன்பழகன்

"தென்னாட்டு காங்கிரசு உறுப்பினர்கள்கூட, 'மத்திய அரசு ஊழியர் தேர்வில் இந்தி பேசுவோருக்கும்—இந்தி பேசாதவர்களுக்குமிடையே உள்ள பாரபட்சப் போக்கை நீக்கி, சுமையை இரு சாராரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்' என்பதை வலியுறுத்துகின்றனர்!

தென்னகக் காங்கிரசுக்காரர்களை உள்துறையமைச்சர் கலந்து ஆலோசித்திருப்பார் என்று நாங்கள் கருதினோம்; ஆனால், மக்களவையில் அளிக்கப்பட்ட பதிலிலிருந்து, அரசு, 'மாற்றத்தை விரும்பவில்லை' என்பது தெளிவாகிவிட்டது.

தற்போதைய தீர்மானத்தின் மூலம், இந்தி பேசாத பகுதி மாணவர்களுக்கு மேலும் ஒரு கூடுதலான சுமை ஏற்படுகிறது!

மத்திய அரசு ஊழியர் தேர்வில் கலந்துகொள்ள இந்தி பேசும் பகுதி மாணவர்கள் ஒரே மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும்; அதே நேரத்தில், இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், குறைந்தது இரண்டு மொழிகளிலாவது — தாய் மொழியுடன் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவர்கள், மூன்று மொழிகளைக் கற்க வேண்டிய சுமையும் ஏற்படுகிறது. மத்திய அரசு ஊழியர் தேர்வுக்குப் பின்னர் அவர்கள், இந்தியையும் கற்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது!

'ஒரு குறைந்தபட்ச அளவுக்காவது ஆங்கில அறிவு பெற வேண்டும்' என்று ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானத்தின் மூலம் நிர்வாகத்தில் தாமதமும், குளறுபடியும்தான் ஏற்படும்."

க. இராசாராம்

திரு. க. இராசாராம் கருத்தறிவிக்கையில் கூறியதாவது:—

"இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம், 'இந்தி இந்தியா' என்றும், 'இந்தியல்லாத இந்தியா' என்றும் நாடு இரண்டு பிரிவாகப் பிரிந்து கொண்டு போகிறது!

'இந்தியாவின் முழு நிர்வாகமும் இந்தி பேசும் மக்களிடமே போய்விடும். இந்தி பேசாத மக்களுக்கு உரிய பங்கு பறிபோகிறது!"

பி. இராமமூர்த்தி

இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் பி. இராமமூர்த்தி கூறியதாவது:—

"நியாயத்தை உணர மறுக்கும் இந்திக்காரர்களின் கெடுபிடிக்குக் காங்கிரசுத் தலைமை பணிந்ததன் விளைவாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவோடு சேர்த்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமே இல்லை. நிர்வாக வசதிக்காகவே இந்த மசோதாவை முக்கியமாகக் கருதுகிறோம். இந்தத் தீர்மானத்தின் மூலம் எல்லா மொழிகளுக்கும் சமவுரிமை இல்லாமற் செய்து விட்டோம்.

எந்தவிதமான நியாயத்தையும் ஏற்க அரசு பிடிவாதமாக மறுத்துவிட்டது; என்ன சொல்லியும் அதன் காதில் விழவில்லை!

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படக் கூடிய கடுமையான விளைவுகளுக்கு இந்த அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்."

இந்தியை விரட்ட 25 இலட்சம் பேர் தயார்!

இந்தி வெறியர் நாத் துடுக்குக்கு அமைச்சர் மு. கருணாநிதி பதில்

சேலம், டிச. 17—

நாடாளுமன்றத்தில் இந்தி வெறியரான விபூதி மிஸ்ரா நாத் துடுக்குடன் தமிழர்களை இழிவுபடுத்தும் முறையில் பேசிய பேச்சுக்கு அமைச்சர் திரு. கருணாநிதி கடும் கண்டனமும் எச்சரிக்கையும் விடுத்தார்.

இங்கு நடந்த கழகச் சிறப்புக் கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசில் வேலை பார்க்கும் தென்னிந்தியர்களுக்கு, 'தலைக்கு ரூ. 25 கொடுத்தால் இந்தி கற்றுக்கொள்வார்கள்' என்று, நாடாளுமன்றத்தில் விபூதி மிஸ்ரா பேசியிருக்கிறார்.

"தமிழ்நாட்டில் 25 இலட்சம் பேர், இந்தித் திணிப்பை எதிர்த்து முறியடிக்கத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள் என்பதை விபூதி மிஸ்ராக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்."

தொழில்நுட்பக் கல்விக்கு ஆங்கிலத்தின் இன்றியமையாமை

வழக்கறிஞர்களிடையே அமைச்சர் சாதிக்பாட்சா வற்புறுத்தல்

குளித்தலை, டிச. 17—

சுகாதாரத் துறையமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா இங்கு வழக்கறிஞர்கள் சங்கத்தில் உரையாற்றுகையில்,

"மருத்துவம், பொறியியல், போன்ற தொழில் நுட்பத் துறைகளில், அவ்வப்போது ஏற்படுகிற முன்னேற்றக் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டுமானால், ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிக்கவேண்டும்"

என்று கருத்தறிவித்தார்

மேலும் அவர் பேசுகையில், 'அரசு நல்ல முறையில் இயங்க வழக்கறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வழங்கி உதவவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

காமராசரின் காலங்கடந்த 'கவலை'!

புதுடில்லி, டிச. 18—

"மக்கள்சபை நிறைவேற்றிய ஆட்சிமொழி (திருத்த) மசோதாவும், ஆட்சிமொழிக் கொள்கைத் தீர்மானமும், நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலிமைப்படுத்துவதற்கு எதிராகக் குறுக்கே நிற்கும்"

என்று, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் இப்போது அஞ்சுகிறாராம்!

மசோதாபற்றிய விவாதத்தில் ஈடுபட மறுத்த அவர், செய்தியாளர்களிடம் சுருக்கமாகக் கூறியதாவது:—

"நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பலப்படுத்துவதே இனி நம்முடைய முக்கியக் கவலையாக இருக்கும்!

'ஆங்கிலம் அல்லது இந்தி தெரிந்திருந்தால்தான் மத்திய அரசு அலுவல்களில் சேரலாம்' என்பதை நாம் அனுமதித்தால், இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள், 'எங்களுடைய சொந்த மொழியிலேயே மத்திய அரசு அலுவல்களில் சேர அனுமதிக்க வேண்டும்' என்று கோருவதைத் தடுக்க இயலாமல் போய்விடும்!

மொழி மசோதாவையும், 'மத்திய அரசு அலுவல்களில் சேர ஆங்கிலமோ இந்தியோ கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்' என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியிருப்பதால், சிறிது காலத்திற்குப் பிறகு, 'எங்களுடைய சொந்த மொழிகளில் பெற்றுள்ள தகுதியைக் கொண்டே மத்திய அரசு உத்தியோகங்களில் சேர எங்களை அனுமதிக்க வேண்டும்' என இந்தி பேசாத பகுதி மக்கள் கோருவர் என்பதே என்னுடைய அச்சமாகும்!"

குழப்பமும் சிக்கலும் மிகுந்த சட்டம்!

தமிழக ச. சோ. கட்சி கருத்து

திருச்சி, டிச. 18—

"மக்களவையில் ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவுக்குத் தரப்பட்டுள்ள திருத்தங்கள், நாட்டில் அதிக அளவுக்குக் குழப்பத்தையும், சிக்கலையும் ஏற்படுத்தியிருக்கிறது"

என, தமிழ்நாடு ச. சோ. கட்சியின் நிர்வாகக் குழு கூறியிருக்கிறது.

"மத்திய அரசில் வேலை தேடுவோருக்கு இந்தியும் ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டும் என்ற பிரிவு, இந்தி பேசாத பகுதி மக்கள் அனைவரையும்—முக்கியமாகத் தமிழர்களைப் பாதிக்கும்"

என்று குழு கருதியது.

திருவாக்கு!

"சந்தேகத்தோடு தொடங்கப்படும் காரியம் சந்தேகத்திலேயே முடியும்; எங்களை நம்புங்கள் — அரசாங்கத்தை நம்புங்கள்"

என்று, இந்தி வெறியர் வாஜ்பேயர் எழுப்பிய சந்தேகம் ஒன்றுக்கு, உள்துறை அமைச்சர் சவாண் பதிலாகத் தெரிவித்திருக்கிறார்.

உண்மை! இந்திக்காரர்கள் பெரும் சந்தேகத்துடன்தான் இன்றைய அரசியல் சதுரங்க ஆட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்!

அவர்களுடைய வெற்றியின் முடிவும் அப்படித்தான்!

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழுக்கில்லை — தகுதி!

"தமிழ் நாட்டுக் குடிமகன் ஒருவரிடமிருந்து தமிழில் வரும் கடிதத்திற்கு, தமிழ் மொழியில் மத்திய அரசிடமிருந்து பதில் கிடைக்குமா?"

என்று கேட்ட கழக உறுப்பினர் இரா. செழியன் அவர்களுக்கு, உள்துறை அமைச்சர் சவாண் அளித்த பதில் இது:—

"இல்லை; இந்தியிலோ ஆங்கிலத்திலோதான் இருக்கும்!"

வெள்ளச் சேதப் பகுதிகளில் சீரமைப்புப் பணி

ரூ.50 இலட்சம் செலவிட அரசு ஒப்புதல்

சென்னை, டிச. 18—

"அண்மையில் ஏற்பட்ட புயல்—மழையின் விளைவாக தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளின் சாலைகளிலும், ஏரிகளிலும் ஏற்பட்ட உடைப்புக்களை அடைத்துப் பழுது பார்ப்பதற்கு ரூ. 50 இலட்சத்திற்கு மேல் செலவாகும்"

என்று, முன்னோட்ட மதிப்பீட்டின் மூலம் தெரியவருகிறது.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அதிகாரிகள் மாநாட்டில் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது.

"பழுது பார்க்கும் வேலைகளுக்குத் தேவைப்படும் பணத்தைத் தாமதமின்றி அனுமதித்தாகவேண்டும்" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

கண்ணிழந்தவர்கட்கு வேலை வாய்ப்பு

தமிழக அரசின் திட்டம்— அமைச்சர் அறிவிப்பு

மதுரை, டிச. 19—

"கண் பார்வையற்றோருக்கும், உடல் ஊனமுற்றவர்கட்கும் வாழ்வளிக்கும்வகையில், அவர்களுக்கு ஆதாயம் கிடைக்கத் தக்க வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரத் தமிழக அரசு ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுத்தும்"

என்று தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு தெரிவித்தார்.

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்

அடுத்த ஆண்டுக்குள் அரசு ஏற்கும்

திருச்சி, டிச. 18—

"தமிழகத்திலுள்ள 1,500 மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளையும் அடுத்த கல்வியாண்டுக்குள் அரசினர் பள்ளிகளுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கேரளமும் கிளர்ந்தெழுகிறது!

இந்தித் திணிப்பை எதிர்க்க நடவடிக்கை

திருவனந்தபுரம், டிச. 17—

இந்தி பேசாத பகுதிகளில் இந்தி திணிக்கப்படாமல் தடுக்கவும், ஆங்கில்த்தை நாட்டின் ஆட்சிமொழியாக நீடித்திருக்கச் செய்யவும், மாநிலம் முழுவதிலுமுள்ள மக்களின் கருத்தைத் திரட்டும் பொருட்டு கேரளத்தில், பல்வேறு தரப்பினரும் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை : 18—12—67 திங்கள்

நம் நாடு

வெளியூர் : 19—12—67 செவ்வாய்

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எல்எல்.பி.

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 3 (18—12—67) திங்கள்

சங்கரி இடைத் தேர்தல்--
வெற்றி உறுதியிலும் உறுதி!

சட்டப் பேரவைக்கான சங்கரி தொகுதி இடைத் தேர்தல், டிச. 20-ம் நாள் நடைபெறவிருக்கிறது.

சென்ற பொதுத்தேர்தலில், இத்தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட கழக வேட்பாளரான ஆர். நல்லமுத்து, எதிர் பாரா வகையில் இளம் வயதிலேயே மறைந்துவிட்டார்: இதன் விளைவே இந்த இடைத்தேர்தல.

இது, பொதுத் தொகுதி அல்ல—தனித் தொகுதி; இத் தொகுதியில இப்பொழுது கழக வேட்பாளராக **பி. வீரமணி** நிறுத்தப் பட்டிருக்கின்றார்.

சென்ற பொதுத்தேர்தல் களத்தில் இத்தொகுதியில், கழகத் தின் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள முடியாமல், தரையில் குப்புற வீழ்ந்து உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சி, இந்த இடைத்தேர்தலில், மீண்டும் தலைதூக்கி நிற்க முயற் சிக்கிறது.

சென்ற பொதுத்தேர்தல் நடைபெற்றது—இவ்வாண்டு பிப்ர வரித் திங்களில்; இவ்விடைத்தேர்தல் நடைபெறுவது டிசம்பர் திங்களில்.

இவ்விரண்டு தேர்தல்களுக்கும் இடையில் பத்தே மாதங்கள் **தான்** ஆகியிருக்கின்றன.

பத்து மாதங்களுக்கு முன் இத்தொகுதியில் காங்கிரசுக் கட்சி யைக் குழிதோண்டிப் புதைத்த வாக்காளர்கள், இவ்விடைத்தேர் தலில் காங்கிரசுக் கட்சியின்மீது ஆசைகொண்டிடப் போதிய காரணமில்லை.

இதுபோன்றே, பொதுத் தேர்தலில் கூடுதலான வாக்களித்து கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்த அதே வாக்காளர்கள், கழகத்திடம் தாங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் பற்றை யும், இப்பத்து மாதங்களில் குறைத்துக்கொள்வதற்குப் போதிய காரணம் எதுவுமில்லை.

தொகுதி வாக்காளர்கள் கழகத்திடம் வைத்திருந்த நம்பிக்கை ஆட்டங்கண்டிருக்கிறது—இத்தருணத்தில் அவர்களே அனுகினால், அவர்களில் பலருடைய ஆதரவு காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத் திடக்கூடும்—என்ற நம்பிக்கை, காமராசருக்கு அறவே கிடையாது.

அத்தகைய நம்பிக்கை அப்பெரியவருக்குக் கடுகளவாவது இருக்கும்பட்சத்தில், பொதுத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டுத் தோல்வி கண்ட பழைய நபரையே, இந்த இடைத் தேர்தலிலும் காங்கிரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தியிருக்கமாட்டார் ?

இப்படி, பொதுத் தேர்தலில் தோற்றுப்போன அதே நபரை—இடைத் தேர்தலில் மீண்டும் நிறுத்திவைத்து—ஒருமுறை தோற்றுப் போனவர் என்பதால வாக்காளர்களிடம் இயலாக ஏறுபக்கூடிய அனுதாபத்தை, வெற்றிக்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்ளு வது சிறந்த தேர்தல் தந்திரமாகும். இத்தந்திரம் தெரிந்தவர்தான் காமராசர்.

இத்தந்திரம் தெரிந்தவராக இருந்தும்கூட, சென்ற பொதுத் தேர்தலில் தோற்றுப்போன இராசேந்திரனே இவ்விடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளராக நிறுத்த அந்தப் பெரியவர் துணியாதது, இத்தேர்தலில் பொருள்படைத்த ஒன்றுகும்.

சங்கரி தொகுதி வாக்காளர்களிடம் காங்கிரசுக் கட்சிக்கும் மதிப்பில்லை—பொதுத் தேர்தலில் தோற்றுப்போன காங்கிரசு வேட்பாளரிடமும் நம்பிக்கை இல்லை—என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்ற காரணத்தால்தான், ஏற்கனவே தோற்றுப்போனவரை, காங்கிரசுக் கட்சியின் சார்பில் நிறுத்த காமராசர் விரும்பவுமில்லை—துணியவுமில்லை!

பொதுத் தேர்தலுக்கும – இவ்விடைத் தேர்தலுக்குமிடையி லிருக்கின்ற பத்து மாதங்களில், 'வாக்காளர் மனத்தில் மாறுதல் எதுவுமில்லை' என்ற உண்மையைத் தாம் தெரிந்துகொண்டிருப்ப தால்தான், அன்று காங்கிரசு வேட்பாளராக நின்று தோல்வியைத் தழுவிக்கொண்ட இராசேந்திரனும், இவ்விடைத் தேர்தலில் காங் கிரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராக நிற்க முன்வரவில்லை எனக் கொள்வதிலும் பொருள் இருக்கத்தான் செய்கிறது.

பொதுத்தேர்தலில் காங்கிரசு வேட்பாளராக நின்று தோற்றுப் போன இராசேந்திரன் காங்கிரசுக் கட்சியின் சார்பில் இவ்விடைத் தேர்தலில் நிறுத்தப்படாமைக்கு இராசேந்திரன் விரும்பாததுதான் காரணமோ அல்லது காங்கிரசுப் பெரியவர் அவரை நிறுத்தத் துணியாததுதான் காரணமோ ? இவ்விரண்டில் எது காரணமாக இருந்திட்டாலும், சங்கரி தொகுதி வாக்காளர்கள், கழகத்தின்பால் தாங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் பற்றையும் இழந்து விடவில்லை என்ற கருத்தை, இராசேந்திரனே இவ்விடைத்தேர்தலில் காங்கிரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படாமல் வேறு ஒருவர் நிறுத்தப்பட்டிருப்பது வெளிப்படுத்துகிறது.

சங்கரி தொகுதியில் வெற்றி தமக்கில்லை என்ற அசைக்க முடி யாத முடிவின்மீதே இவ்விடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி வேட்பாளரை நிறுத்தி இருக்கிறது என்பதே உண்மை.

காங்கிரசுக் கட்சிக்கு வெற்றி கிடைத்திடக்கூடும் எனக் கடு களவு நம்பிக்கையாவது காமராசருக்கு இருந்திருக்குமானால், சங்கரி தொகுதியில் அவர் சண்டப்பிரசண்டம் செய்யாமல் இருந்திருப் பாரா ?

அத்தொகுதியிலேயே அவர், தமது பரிவாரங்களுடன் இதற காகுள்ளாகப் பாசறை அமைத்துக்கொண்டல்லவா இருந்திருப் பார் !

இந்திரா காந்தி சொன்னது என்ன?
மொழிப் பிரச்சினை மறு பரிசீலனைக்கு வந்ததா?
இந்தி இணைப்பு மொழியாவது ஒருகாலும் இயலாது!
நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் முழக்கம்

"……இந்த நாடாளுமன்றக் குழு, 'சமஸ்கிருதத்தை வளர்க்க வேண்டிய சிறப்பான பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு' என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது; ஆனால், ஏன் சமஸ்கிருதம் வளர்க்கப்பட வேண்டுமென்பதற்கு அது காரணம் சொல்லவில்லே. ஒருவேளை, 'சமஸ்கிருதம் ஒரு மூலமொழி' என்றும், 'அதன்வழி இந்தியாவின் பழைய பண்பாட்டைப் புரிந்துகொள்ளலாம்' என்றும் கருதியிருக்கக் கூடும்.

"இதுதான் காரணம் என்றால், சிறப்புத்தன்மையில் தமிழும் அதே அளவு பழமையும் சிறப்பும் உடையது; அதோடு, தமிழ் உயிருள்ள வழக்கு மொழி! சமஸ்கிருதமோ செத்த மொழி!

"பழம்பெரும் பண்பாட்டையும், கலே மரபுகளையும், இன்றைய நாகரிக வளர்ச்சியையும் புரிந்துகொள்ள உதவும் மூலமொழி தமிழ்; ஆகவே, தமிழைச் சிறப்பாக வளர்த்திட மத்திய அரசு தனி அக்கறை காட்ட வேண்டுகிறேன்"

என்று கழக உறுப்பினர் திரு. எஸ். டி. சோமசுந்தரம், நாடாளுமன்ற மக்களவையில், கல்விக் குழு அறிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார், அவர் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு :—

குழுக்கள்---அறிக்கைகளால் எவ்விதப் பயனுமில்லே !

"கடந்த 70, 80 ஆண்டுகளாக நம்முடைய கல்வித் திட்டத்தை ஆராய்ந்து வளர்ச்சிகரமான வாய்ப்பு — வழிகளைக் கூறிட கமிட்டிக்குமேல் கமிட்டி யாகப் பல குழுக்கள் அமைக் கப்பட்டுவிட்டன.

விடுதலைக்குப் பிறகு மட்டும் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. முன்னுள் குடியரசுத் தலேவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தலேமையில், பல்கலேக் கழகக் கல்வி முறையை ஆராய ஒரு குழு அமைக்கப் பட்டது; அதன் பின்னுல் உயர் நிலேப் பள்ளிக் கல்வி முறையை ஆராய டாக்டர் இலட்சுமண சாமி (முதலியார்) தலேமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது; இப்போதோ, பேராசிரியர் டி. எஸ். கோதாரி தலேமையில் அமைக்க கல்விக் குழுவின் அறிக்கையும், நாடாளுமன்ற கல்வித் குழு உறுப்பினர்களின் அறிக்கையும் நம் முன்னே உள்ளன.

இப்படி, குழுவுக்குப் பின் குழு அமைக்கப்பட்டு அறிக்கைமேல் அறிக்கைகள் வெளியிடப்படு கின்றன. இந்த அறிக்கைகள் நல்ல புதுமை — யோசனைகள் பொதிந்த கருத்துக் குவியல களாக இருக்கின்றன.

அறிவாளர்கள் இப்படி நுணுகி நுணுகிச் சொல்லியும், இந்நியா வின் சமூக — பொருளாதார நிலேகளுக்கேற்புக் கல்வி முறை மாற்றி அமைக்கப்படவே இல்லே; காரணம், 'இந்த அறிவுரை களேச் செயல்படுத்த வேண்டும்' என்ற ஆர்வமும் துடிப்பும் நிர் வாகத் துறைப் பெரியவர்களுக் கும், கல்வித் துறைத் தலேவர் களுக்கும் கொஞ்சமும் இல்லா மைதான் !

உள்ளபடி, 'கல்வித் துறையில் மாற்றங்கள்தாக வேண்டும்' என்ற முனேப்பு இல்லாமல், இப் படிக் கோடிக்கணக்கான ரூபா யைச் செலவழித்துக் குழுக்கள் அமைப்பதிலும், அறிக்கைகள் வெளியிடுவதிலும் பயனே இல்லே !

தவருன அடிப்படையில் கல்வித் துறையில் ஒதுக்கீடு

தலேவர் அவர்களே ! இனி கல்விக் குழுவின் அறிக்கையில் உள்ள குறைகளேச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தக் கல்வி முறையினுல் சமூக மும் பொருளாதாரமும் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என் பதைக் கவனிக்காமலே ராம், கல் லூரி—பலகலேக் கழகக் கல்வி வாய்ப்புகளே அதிகமாகும் நிலேமையை இந்த மன்றம் கவனமாகப் பரிசீலிக்க வேண்டு கிறேன்.

கல்வித் துறை ஒதுக்கீடுகள் தவருன அடிப்படையில் அமைந்துள்ளன; அதன் விளேவுதான், படித்தவரின் வேலேயில்லாத் திண்டாட்டம்!

அதன் விளேவுதான் சட்டம்— ஒழுங்குப் பிரச்சினேகள்!

அதன் விளேவுதான் சமூக அமை திக்கு ஏற்படக்கூடிய நிரந்தர அபாயம்!

சமூகத்தின் கோணத்திலிருந்து பார்த்தால், இது, 'சிக்கனம் அல்ல' என்பதோடு, தனி மனி தக் கோணத்திலிருந்து பார்த் தால், இதை, 'கொடுமை' என்றே சொல்லவேண்டும்.

எவ்விதம் மதிப்பிடுவது ?

நிதி ஒதுக்கீடுகள் எப்படித் தவரு னவை என்பதை எனுஞல் விளக்க முடியும்; மூன்று கோணங்களில் இருந்து அதைச் செய்யலாம் :—

(1) பல நிலேகளில் — மட்டங் களில் கல்விச் செலவையும், கிடைக்கும் பலனேயும் ஆராய்தல் ;

(2) பொருளாதார அமைப் பினேப் புதுப்பித்துச் செம் மைப்படுத்தத் தேவைப்படும் மனித ஆற்றலே மதிப்பிடு தல் ;

(3) நம் நாட்டுக் கல்வித்துறை வெற்றியை பிற நாடு களோடு ஒப்பிற்தல.

கல்விச் செலவையும் கிடைக்கும் பலனேயும் இரண்டு நிலேகளி லிருந்து மதிப்பிடலாம்; முதலில், சமூகத்தின் நிலேயிலிருந்தும், அடுத்தத் தனி மனிதன் என்ற நிலேயிலிருந்தும் அதன் மதிப் பிடலாம்.

எந்தக் கோணத்திலிருந்து பிரச்சினேயை அணுகுவது ?

சமூகத்தின் கோணத்திலிருந்து பிரச்சினேயை அணுகுவதையே நான் விரும்புகிறேன். சமூகத் தின் கோணத்திலிருந்து பார்க் கையில், அதிகாரபூர்வமாகத் தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள், குறைத்து மதிப்பிடப்பட்டவை' என்றே கருதுகிறேன். ஓர் ஆண்டில் கல்வித் துறையில் முதலீடு எல்லாவற்றையும் செலவுக் கணக்கில் சேர்க்க விலேயே.

புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள், போக்குவரத்துச் செலவு, கட்டட வாடகை, கட்ட டம், பொருட்கள், சோதனைக் கருவிகள் போன்றவற்றிற்கான தேய்மானம், முதிர்ந்த மாணவர் கள் வேலேயின்றிப் படிப்பதால் இழக்கும் தொகை—இவற்றை யெல்லாம் கணக்கில் சேர்த் தால், இங்கே சராட்டப்படுகிற பணவீக்கக் கல்விச்செலவு இரட் டிப்பாகும்.

செலவிட்டதற்கு ஏற்ப கிடைத்த பலன் இதுவா ?

கல்வியில் சமூகத்துக்கு ஏற்பட்ட னவைகளேச் சரியாக மதிப்பிட் டாக வேண்டும். படிக்காத மனிதரின் வருவாய்க்கும்— படித்த ஒருவரின் வருவாய்க்கும் இடையே உள்ள தொகை வித்தியாசமே கல்வியின் பய னுகக் கணக்கிடப்படுகிறது.

கல்விக்கான செலவும்—கல்வி யால் கிடைத்த பலனும் ஒப்பிட் பட்டால், கல்வியில் செல வழித்த பணத்துக்குத் தக்க பலன் கிடைத்ததா என்பதைக் கண்டறிய முடியும்.

இப்படிச் செய்யப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின் முடிவுப்படி, 'இந்தியாவில், கலவித்துறையில் செலவுக்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லே' எனவது உறுதி யாயிற்று.

துவக்கக் கல்வியில் 17 சதவீத மும், நடுநிலேக் கல்வியில் 12 சதவீதமும், உயர்நிலேக் கல்வியில் 10 சதவீதமும்,

(4-ம் பக்கம் பார்க்க)

தொகுதியிலுள்ள பட்டித்தொட்டிகளிலெல்லாம் வீரமுழக்க மிட்டுக்கொண்டல்லவா அவர் இருந்திருப்பார் !

அத்தொகுதியில் காலலவக்க விரும்பாததிலிருந்தே, இவ் விடைத் தேர்தல முடிவு காங்கிரசுக் கட்சிக்கு மறுபெரு தோல்வி யாக முடிந்துவிடும் என்பதை, காமராசர் முன்கூட்டியே தெளி வாகத் தெரிந்துகொண்டிருக்கின்றார் என்பது மெய்ப்பிக்கப்படு கிறது.

மூன்றுவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த தோல்வி, இன்னமும் காமராசர் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருக்கிறது. இது, பழங்கதையாஞலும் அத்தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு வரலாறறுச் சிறப்புமிக்க தோல்வியைத் தேடித்தந்த அப்பகுதி வாக்காளர்களிடம், இப்போ ழுது மட்டும் காமராசருக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டுவிடும் ?

மீண்டும் ஒரு திருச்செங்கோட்டை, இவ்விடைத்தேர்தலில் கழகத்துக்குத் தேடித் தரவேண்டியது, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களின் தலேயாய கடமையாகும்.

தங்களுக்குரிய கடமையை, சேலம் தோழர்கள் சிறப்புற நிறை வேற்றி வைப்பர் என்பதில் ஐயமில்லே.

வீரமணி வெற்றி நிச்சயம் ! கழகம் இத்தொகுதியில் வெற்றி வாகை சூடும் என்பதும் உறுதியிலும் உறுதி !

—**கா. கி.**

தமிழில் பண அஞ்சல் மடல் அச்சிடப்படமாட்டாதாம்

இந்தியிலும் ஆங்கிலத்திலும்தான் இருக்கவேண்டுமாம்

கழக உறுப்பினர் கிருட்டினன் கேள்விக்கு டில்லி தரும் பதில்

புதுடில்லி, டிச. 12—

"வட்டார மொழிகளில்—குறிப்பாகத் தமிழில் பண அஞ்சல் மடல் (மணியார்டர் பாரம்) அச்சிடப்படுவது நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா? அப்படியானால் காரணம் என்ன? இது தொடர்பாக இறுதி முடிவு எதுவும் செய்யப்பட்டுள்ளதா?"

என்று, கழக உறுப்பினர் தா. கிருட்டினன், மக்களவையில் கேட்ட கேள்விக்குத் துணையமைச்சர் திரு. ஐ. கே. குஜிரல் அளித்த பதில் வருமாறு:—

"ஆம்; முன்பு இரு மொழிப் பண அஞ்சல் மடல்களை—ஆங்கிலத்திலும் வட்டார மொழியிலும்—வட்டார அஞ்சல் துறைத் தலைமை அதிகாரிகள் அச்சிட்டனர்; அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மொழி பேசும் பகுதியிலிருந்து மற்றொரு மொழி பேசும் பகுதிக்குச் செல்லக்கூடிய பண அஞ்சல் மடல் போன்றவைகளை, இந்தியிலும் ஆங்கிலத்திலும் தான் அச்சிட வேண்டுமென ஒரு கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

★

தோழர் கிருட்டினன், அஞ்சல் துறைத் தொடர்பாக மேலும் கேட்ட கேள்விகளும், அமைச்சர் தந்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"மானாமதுரை, திருப்புவனம் ஆகிய இடங்களில் பணியாற்றிய தொலைபேசிச் செய்தி எடுத்துச் செல்வோர் அண்மையில் வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டனரா? அப்படியானால் காரணம் என்ன? அந்த ஊர்களில் பொதுத்தொலைபேசியைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு மாற்று வசதி ஏதேனும் செய்யப்படுமா?"

பதில்:—"ஆம்; ஆள் மூலம் தொலைபேசிச் செய்தி எடுத்துச் செல்லும் முறை, அந்த இரு இடங்களிலும் நிறுத்தப்பட்டுள்ளது. தானே இயங்கும் தொலைபேசி நிலையத்தையும், நெடுந்தொலைபேசி ஏற்பாட்டை உள்ளூர்த் தொலைபேசி ஏற்பாடாக மாற்றியிருப்பதையும் பார்வையிட்ட பிறகே ஆள் மூலம் செய்தியனுப்பும் ஏற்பாடு ரத்து செய்யப்பட்டது. உள்ளூர்ப் பொது நெடுந் தொலைபேசி நிலையங்களில் ஆள்மூலம் செய்தியனுப்பும் முறை ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது."

★

கேள்வி:—இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிளை அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கும், எல்லா கூடுதல் துறை (இ. டி.) அதிகாரிகளுக்கும் 'அட்காக்' குழுவின் பரிந்துரைக்கேற்ப வழங்க அனுமதிக்கப்பட்ட படித் தொகையான ரூ. 15.50கொடுக்கப்படாமல் இருந்துவருவது உண்மையா? அப்படியானால் காரணம் என்ன? அதேபோல், ஆசிரியராக இருக்கும் கிளை அஞ்சல் அதிகாரிகளுக்கும், ஆசிரியரல்லாத கிளை அதிகாரிகளுக்கும் இந்த 'வெட்டு' ஏற்படுத்தப்படுமா?"

பதில்:—"இல்லை; எனினும், மாநில அரசுப் பணியிலோ, ஆசிரியப் பணியில் உள்ள கிளை அஞ்சலக அதிகாரிகளுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவுக்குப் பஞ்சப் படி பெறும் ஆசிரியர்களாக உள்ள கிளை அஞ்சலக அதிகாரிகளுக்கும் படியில் மட்டும் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. 'அட்காக்' குழுவின் பரிந்துரைப்படி, மத்திய அரசு ஊழியர் பெறும் பஞ்சப் படி அளவுக்குப் பெறும் ஈ.டி. ஊழியர்களுக்கு 'அட்காக்' குழுவின் பரிந்துரைப் படி கொடுத்தால், இரட்டிப்புப் பஞ்சப் படியாகிவிடும்; எனவே, அத்தகையவர்கள், அந்தப் படி உயர்வைப் பெறத் தகுதியற்றவர்களாவர்."

உலகத் தமிழ் மாநாடு

★

போலீசுப் பாதுகாப்பு

"சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, பெரும் அளவில் போலீசுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்"

என்று, போலீசுக் கமிஷனர் குப்புசாமி கூறினார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"பிற மாவட்டங்களிலிருந்தும் போலீசார் வரவழைக்கப்பட்டுள்ளனர். மாநாட்டையொட்டி நகரில் நடைபெறவிருக்கும் ஊர்வலம் செல்லும் பாதைகளின் இருபுறங்களிலும், சாலைக்கும்—பிளாட்பாரத்துக்கும் இடையே கான்கிரீட் தடுப்புச் சுவர் இல்லாத பகுதிகளில் விரைவில் தடுப்புச் சுவர் போடப்படும்."

தனித் தபால் தலை

உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தனித் தபால் தலையை மத்திய அமைச்சர் டாக்டர் ராம் சுபாக் சிங் சனவரி 3-ம் நாள் வெளியிடுவார்.

சிலைகள் அமைப்பு.... அண்ணா விளக்கம்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நகரில் பெரும் செலவில் ஏராளாமான சிலைகள் அமைக்கப்படுவது பற்றி விளக்கமளிக்கையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"சிலைகளை அரசு அமைக்கவில்லை; எனவே, அரசுக்குச் செலவில்லை; தனிப்பட்டவர்கள் பலர் பணம் வசூலித்துச் சிலைகள் அமைக்கின்றனர்."

வானொலியில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு—மாநாட்டுச் சிறப்புப் பகுதிகள் ஆகியவைகளை விளக்கி, வானொலி மூலம் மாநாட்டு மக்கள் தொடர்புக் குழுத் தலைவர் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் விளக்கிக் கூறினார். (விவரம் பின்னர்).

வங்க அரசின் பொருளாதார நெருக்கடி

புதிய ஆட்சிக்கு உதவுகிறது டெல்லி அரசு!

கல்கத்தா, டிச. 16—

பொருளாதார நெருக்கடியிலிருந்து மேற்கு வங்க அமைச்சரவையைப் பாதுகாப்பதற்காக உடனடியாக ரூ. 10 கோடி அளிக்க மத்திய அரசு முன்வந்துள்ளது.

"மேற்கு வங்காளத்தில் கூட்டணி அரசு பதவி ஏற்றபோது, அரசின் கருவூலத்தில் சுமார் ரூ. 36 கோடி இருந்தது; டிசம்பர் 1-ம் நாள் கூட்டணி அமைச்சரவை பதவி விலகும்போது ரூ. 1.62 கோடிதான் இருந்தது; ஏற்கனவே மேற்கு வங்கப் பொருளாதார நிலை 'அபாயகர' எல்லையைத் தாண்டிவிட்டது" என்று அரசு அதிகாரி ஒருவர், செய்தியாளரிடம் சொன்னார்.



டிவிஎஸ் டெலிவரி வான் பாடி

எண்ணெய்ச் செலவும் டயர் தேய்மானமும் குறைவு. பல்லாண்டுகள் உழைக்கும். உறுதியானது.

பாடிகள் கட்டுவதில் சுமார் நாற்பது ஆண்டுகள் அனுபவமுள்ளது டிவிஎஸ். அவரவர் தேவைக்கேற்ப எந்தவிதமான சேஸிஸ் மீதும் லேசான, உழைப்பிற்கு உறுதியான பாடிகளைத் தயாரிக்கிறது டிவிஎஸ்.

TVS

டிவிஎஸ் — இந்தியாவிலேயே பாடிகள் கட்டுவதில் மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்) 81/4252

மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டால்...?

பம்பாய், டிச. 16—

கடந்த திங்களன்று ஏற்பட்ட பயங்கரமான நில நடுக்கமும், அதையடுத்து 40 மணி நேரத்தில் ஏற்பட்ட அதிர்வுகளும்—இவற்றில் பல உணரப்படவில்லையாயினும், கொலாபாவிலும் பூனாவிலுமுள்ள நில அதிர்வுப் பதிவுக் கருவிகள் எல்லா அதிர்வுகளையும் பதிந்துள்ளன—இந்நகரில் வாழும் மக்களிடையே பலவிதமான விளைவுகளை உண்டாக்கின.

முதலில் ஏற்பட்ட நடுக்கங்களினால் படுக்கையிலிருந்து தூக்கியெறியப்பட்டுக் கும்மிருட்டில் விடப்பட்ட மக்கள், அதையடுத்து இரவுகளில் மெழுகுவர்த்தி அல்லது சிறு மண்ணெண்ணெய் விளக்குகள் அல்லது டார்ச்சு விளக்குகளைப் படுக்கைக்கு அருகில் வைத்துக்கொண்டனர்; அதனால், மேற்சொன்ன பொருட்களுக்குப் பெரிய கிராக்கி ஏற்பட்டது;

பெண்கள் வெளியே செல்லும் போது அணிகின்ற ஆடைகளுடனேயே தூங்கினர்; இரவில் நில அதிர்வு ஏற்படும்போது அலங்கோலமாகத் தெருவில் ஓடவேண்டி வருவதைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு செய்தனர்.

சிலர்—ஆண்களும்தான்—தாம் அணிந்திருந்த துணிமணிகளில் நோட்டு, மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வைத்துக்கொண்டனர்; வீட்டிற்கு வெளியே ஓடுகையில் அவற்றைப் பத்திரமாகக் கொண்டு செல்வது இதன் நோக்கமாகும்.

ஏராளமானவர்கள் தமது விலை உயர்ந்த பொருட்களைப் பாங்கிகளின் பாதுகாப்புத் துறைகளில் போட்டு வைத்தனர் எனத் தெரிகிறது.

நில நடுக்கத்தால் கதவுகள் திறக்க முடியாமல் சிக்கிக்கொள்ளக்கூடாது என்பதற்காகப் பல வீடுகளில் அவை திறந்தே வைக்கப்பட்டிருந்தன.

இன்னும் சில வீடுகளில் கதவுகளின் பூட்டுக்கள் பூட்டப்படவில்லை; அவசர நேரத்தில் சாவியைத் தேடுவதைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு செய்யப்பட்டது. திங்களன்று கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டபோது, வெளியே ஓட முடியாதவாறு பலர் சாவியைத் தேடித் தத்தளித்தனர்.

வாங்குவாரற்ற பரிசு!

புதுடில்லி, டிச. 15—

இந்திய அரசு அளிக்க முன்வந்த ரூ. 10 ஆயிரம் மதிப்புள்ள பரிசை வாங்க எவரும் முன்வரவில்லை!

அணுசக்தித் துறை இப்பரிசை அறிவித்தது; 'கீகர்' கருவியை வைத்துக்கொண்டு ஓய்வுநேரத்தில் அணு மூலகங்களைத் தேடுவோர் அதைக் கண்டுபிடித்துவிட்டால், இப்பரிசு கிடைக்கும்.

அதற்கேற்ப 30 'கீகர்' கருவிகளைத் தேட்டக்காரர்கள் இலவசமாக அணுச்சக்தித் துறையிலிருந்து பெற்றுச் சென்றனர்; அவர்களில் எவரும் வெற்றி காணவில்லை!

இதற்கிடையே அரசின் நில உட்கூற்றியல் துறையினர், வட இந்தியாவில் கண்டுபிடித்துவிட்டனர். அவர்கள் குலுப் பள்ளத் தாக்கிலுள்ள கார்வாலில், யுரேனியமுள்ள பாறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

அப்புதிய பகுதிகளிலுள்ளவற்றை எடுப்பதற்கு முன்னர் நிரம்ப வேலை செய்யவேண்டிவரும் என்று சில உயர் நிபுணர்கள் கூறுகின்றனர். அவ்வாறு செய்யும்போது கார்வால், மற்றும் குலுப் பள்ளத் தாக்கில் வாழும் ஆட்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும்.

இராஜஸ்தானத்தில் தேடிய போதும் யுரேனியமுள்ள சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; ஆனால் அங்குள்ள மூலகம் மட்டமானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தாராவியில் தென் சென்னை வெற்றி விழா

பம்பாய்—தாராவி தி. மு. க. சார்பில், 'திராவிடரகத்'தில், தென் சென்னை வெற்றி விழா, திரு. எஸ். பி. சங்கர் தலைமையில் கொண்டாடப்பட்டது. செயலாளர் த. மு. பொற்கோ வரவேற்புரையாற்றினார்.

தோழர்கள் எஸ். தியாகராசன், நெல்லை சு. தங்கையா, நெல்லை வளவன், மாணவன் வேலன், பொருளாளர் எம். சின்னப்பா, எஸ். கே. சாமி உட்படப் பலர் பேசினர்.

இரங்கல்

தலைமைப் பொறியாளர் (பொது மற்றும் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்)—தலைமைப் பொறியாளர் (கட்டிடம்)—தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை)—மற்றும் பொதுப் பணித்துறை அலுவலர்கள், 11—12—67-ல் நிறைவேற்றிய இரங்கல் தீர்மானம்:—

பொதுப் பணித் துறையில் நீண்டகாலம் போற்றற்குரிய முறையில் நிர்வாகப் பொறியாளராகப் பணியாற்றிய திரு. என். பொன்னுசாமி அவர்கள், தலைமை மருத்துவமனையில் 9—12—67 அன்று இளம் வயதிலேயே மறைவெய்தியது குறித்து தலைமைப் பொறியாளர்கள் — பொறியியல் துறை அலுவலர்கள் அடங்கிய இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது. மறைந்த அன்னாரின் துணைவிக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கும் இதய பூர்வமான இரங்கலை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கின்றது.

மறைந்த திரு. பொன்னுசாமி அவர்கள் நெறிமுறைகள் வழுவாது, திறமை—நேர்மை—நல்லொழுக்கம்—நற்பண்பு — ஆன்ற ஊக்கம்—கடிய உழைப்பு ஆகியன ஒருங்கே பெற்ற ஓர் அரிய பொறியியல் வல்லுநராகச் சிறப்புறப் பணியாற்றி இருக்கின்றார். அவர்தம் எளிய வாழ்க்கையும், எவருடனும் புன்னகைத் தவழும் முகத்துடன் பழகும் பான்மையும் அவருடன் இணைந்து பணியாற்றிய ஏனைய பொறியியல் அதிகாரிகளையும், அலுவலர்களையும் வயப்படுத்தியது.

அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செய்து இரு நிமிட மௌனம் ஏற்கப்பட்டது. சொல்லொணாத் துயரில் ஆழ்ந்துள்ள அவர்தம் துணைவி அவர்கட்கும் இக்கூட்டத்தின் இதயம் நெகிழும் ஆறுதலைத் தெரிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மறைந்த அவர்தம் நினைவிற்குப் பெருமை கூட்ட பொதுப் பணித் துறை அலுவலகங்களின் பணிகள் அனைத்தும், 11—12—67 மாலை 4-மணியளவில் நிறுத்தப்பட்டன.

கலைக் குழு முகவரி

மதுரை முத்து கலைக் குழு,
எஸ். டி. நடராசன்,
89-ஏ. அருணா லாட்ஜ்,
மேல மாசி வீதி, மதுரை.

இந்திரா காந்தி அன்று சொன்னது என்ன?

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கல்லூரி முதுநிலைக் கல்வியில் 7 சதவீதமும். பொறியியற் கல்வியில் 10 சதவீதமும் தான் செலவுக்கேற்பக் கிடைத்த பலன்கள்!

செலவையும் பலனையும் ஒப்பிட்டால் 11 முதல் 19 சதவீதமே கிடைக்கிறது.

துவக்கக் கல்வி தவிர மற்ற எல்லா நிலைகளிலும் செலவுக்கேற்ற பலன் கிடைக்கவே இல்லை.

எனவே, இந்த வகையில் நாம் இன்னம் அக்கறை செலுத்த வேண்டும்.

ஆய்வுக் குழு பெற்ற வெற்றிதான் என்ன?

"தொடக்க நிலை தாண்டியதும், கல்வி என்பது மனித ஆற்றலோடு இணைந்ததாக அமைய வேண்டும்" என்று கல்விக் குழு சுட்டிக்காட்டியிருப்பது மிகப் பொருத்தமானது.

சமூகத்துக்குத் தேவைப்படும் மனித ஆற்றலை அடிப்படையாகக் கொண்டே கல்விமுறை வகுக்கப்பட வேண்டும்.

இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், கல்விக் குழுவின் இந்த அறிக்கை ஒரு வெற்றியே; அதற்காக அந்தக் குழுவினைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்த ஆய்வுரைகளைச் செயல்படுத்துவதில் இந்தக் குழு எந்த அளவில் வெற்றி பெற்றிருக்கிறது? அந்தத் தோல்வியின் அளவைச் சுட்டிக்காட்ட நான் உள்ளபடி அஞ்சுகிறேன்.

தேவைக்கு அதிகமாக ஏன் உருவாக்கப்படுகின்றனர்?

நம்மைச் சுற்றிலும் எம்.ஏ., எம்.எஸ்சி. பட்டதாரிகள் நிறைந்து கிடப்பதைப் பார்க்கின்றோம். சாதாரண மெட்ரிகுலேஷன்—கல்லூரிப் புகுமுக வகுப்பு படித்தவர்கள் செய்யக்கூடிய சாதாரண எழுத்தர் பணியை இவர்கள் செய்கிறார்கள்.

சாதாரண 'டிப்ளமா' பெற்றவர்கள் செய்யக்கூடிய வேலைகளை, பொறியியல் பட்டம் பெற்றவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்; இதற்கு என்ன காரணம்?—தேவைக்கு மீறி பட்டதாரிகள் உருவாக்கப்படுவதுதான்!

டாக்டர்கள், எஞ்சினீயர்களின் பெயர்கள்கூட, வேலை தேடித் தரும் நிறுவனங்களின் பதிவேடுகளில் காணப்படுகின்றன! அவர்கள், ஒரு குறிப்பிட்ட பணிக்கென்றே படித்துப் பட்டம் பெற்றவர்கள்!

இதிலிருந்து நாம் அறிவது ஒன்றே ஒன்றுதான்; சமூகத்தின் பொருளாதாரத் தேவைக்கு அதிகமாக எல்லாத் துறைப் பட்டதாரிகளும் இங்கே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்!

அறிவுக் கூர்மையுள்ள ஏழை மாணவர்களுக்கு...

"சனநாயக சமூக அமைப்பில், மக்களின் கல்வித் தேவையை அரசு நிறைவு செய்யவேண்டாமா" என்று கேட்கக்கூடும்; உண்மைதான்; மக்களின் தேவை மறுக்கப்படக்கூடாதுதான்; ஆனால் அதிகம் படிக்க விரும்புகிறவர்கள் அதிகம் செலவு செய்தே ஆகவேண்டும்.

அதே நேரத்தில், அறிவுக் கூர்மையுள்ள ஏழை மாணவர்கள், பணமுடை காரணமாக உயர் கல்வி மறுக்கப்படவும் கூடாது.

20 ஆண்டுகளாயிற்று--- இலட்சியம் நிறைவேறிற்று?

துவக்கக் கல்வியின் தரமும் முறையும் உயர, உரிய முயற்சிகள் எடுக்கவேண்டும். 14-வயது வரை இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டாக வேண்டுமென்று அரசியல் சட்டம் பணித்திருக்கிறது.

ஆனால், 20 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னமும் அந்த இலட்சியம் முழுக்க ஈடேறவில்லை!

இதற்கும் காரணம், உயர்மட்டக் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தித் துவக்கக் கல்வியைப் புறக்கணித்ததுதான்!

பாரபட்சம் ஆகாதா?--- ஒருமைப்பாடு குலையாதா?

நாடாளுமன்றக் குழு அறிக்கையில், 'தாய் மொழி—இந்தி—ஆங்கிலம் அல்லது ஏதாவதொரு மொழியில் அறிவு பெற வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இந்தி மாநில மாணவர் ஒருவர், தன் தாய்மொழி இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைக் கற்றால் போதும்; ஆனால் இந்தியைத் தாய்மொழியாய்க் கொள்ளாதவரோ, மூன்று மொழிகளைப் படித்தாக வேண்டும்; இது, இந்தி தெரியாத மாணவருக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சம் ஆகும்.

இந்தப் பாரபட்சம் நடைமுறையில் இருக்கையில், தேசிய ஒருமைப்பாட்டை எப்படி எதிர்பார்ப்பது?

மாறாக, தேசிய ஒருமைப்பாடு குலையவே செய்யும்.

என்ன? என்ன? என்ன?

மத்திய அரசுப் பணித்துறையில் நுழைவதற்கான தேர்வுப் போட்டியில் கலந்து கொள்ள,

இந்தி மொழி அறிவோ--- ஆங்கில மொழி அறிவோ---

அவசியம்

என்று கூறுகிறது காங்கிரசு மொழிச் சட்டம்.

அப்படியானால்,

இந்தி மொழியாளர்களுக்குக் குறைந்தபட்ச படிப்பளவு என்ன?

ஆங்கிலம் தெரியும் என்பதைக் காட்ட குறைந்தபட்ச அளவுகோல் என்ன?

இந்திப் பிரதேசத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள்' இந்தி பேசாத மாநிலங்களின் பல்கலைக் கழகத்திற்கு ஈடானவையாக மாறுமா?

கண்டித்த நிலையிலேயே பரிவும் காட்டினர்!

நம்முடைய நாட்டில் சட்டத்தை மதித்து—அமைதியை விரும்பி வாழ்கிற மாநிலம் ஒன்று உண்டு; அதுதான் தமிழ்நாடு; அதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

ஆனால் அந்த மாநிலம், 1965-ல் உணர்ச்சியில் கொதித்துக் கொண்டிருந்தது; அங்கே வன்முறையும் இருந்தது—அது எல்லாராலும் கண்டிக்கப்பட்டது; ஆனால் அனைவரும், 1965-ல் நிகழ்ந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சிக்குப் பரிவு காட்டவே செய்தார்கள்!

'ஒரு மொழி'க்கு எதிர்ப்பல்ல--- 'ஆட்சி மொழி'க்கே எதிர்ப்பு

'இந்தி, ஒரு மொழி' என்ற அளவில் நாங்கள் எதிர்க்கவில்லை; ஆனால், 'இந்தி ஒரே ஆட்சிமொழி' என்ற நிலையை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைப் பெருமையுடன் சொல்லுவேன்.

1960-ல் பண்டித நேரு சென்னை வந்தபோது அவருக்குக் கறுப்புக்கொடி காட்டியது, மக்கள் மனப்போக்கைப் பிரதிபலித்தது.

தி. மு. கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், பண்டித நேருவை—அவருடைய அறிவுக் கூர்மையை—சனநாயக மனப்போக்கைப் பெரிதும் பாராட்டுகின்றவர்கள்; அதனால்தான், 'மொழிப் பிரச்சினையில் மக்களின் மனப்போக்கைச் சரியாக நேரு புரிந்துகொள்வார்' என்று எண்ணி—அவர் முன்னிலையில் கறுப்புக்கொடி காட்ட தி. மு. கழகம் முடிவு செய்தது.

ஆனால், எதிர்பார்த்த பலன் அதனால் ஏற்படாததால், சென்னை — கோடம்பாக்கத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டினைக் கூட்டிக் குடியரசுத் தலைவருக்கே கறுப்புக் கொடி காட்ட முடிவு செய்தது தி. மு. க.

மொழிப் பிரச்சினையில், தமிழக மக்களின் உணர்ச்சி ஆழத்தைப் புரிந்துகொண்ட பண்டித நேரு, 'இந்தி மட்டுமே தனி ஆட்சிமொழியாக இராது; தென்னக மக்கள் இந்தியை விரும்பி ஏற்கும் வரை ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்கும்' என்ற வாக்குறுதியைத் தந்தார்.

ஆனால் அடுத்து வந்த தலைமை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியோ, நேருவின் வாக்குறுதியைச் செயல்படுத்துவதில் முனைப்புக் காட்டவில்லை!

தூதிருஷ்டவசமாக, 1965 சனவரி 26-ல், 'இந்தி மட்டுமே ஆட்சி மொழியாகும்' என்று அறிவிக்கப்பட்டது.

வாக்குறுதியை நிறைவேற்றாமைக்காகத் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களும், மத்திய அரசை எச்சரித்தார்கள்.

தமிழக மாணவர்கள் ஒரு போராட்டக் குழு அமைத்து, 'இதுபற்றி அரசியல் சட்டம் திருத்தப்படாதவரையில் எங்களுக்குத் திருப்தி ஏற்படாது' என்பதை, தொலைவில் உள்ள டில்லிப் பட்டணத்துக்குத் தெரிவித்தார்கள்.

இந்தி, தனி ஆட்சிமொழி ஆக்கப்படும் தினத்தை, 'துக்க தின' மாய்க் கருதுவதாகத் தி. மு. கழகமும் அறிவித்தது! தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்! சட்டத்தை மதித்து அமைதியை விரும்பும் மக்கள், எந்தத் தியாகத்தையும் செய்ய முற்பட்டார்கள்! பலர் தீக்குளித்து மாண்டனர்!

பயங்கர நிலைமையைப் புரிந்து கொண்ட டில்லி, திருமதி இந்திரா காந்தியைச் சென்னைக்கு அனுப்பியது.

சென்னை சென்று திரும்பிய இந்திரா காந்தி, 'மொழிப் பிரச்சினையில் மறு பரிசீலனை தேவை' என்று சொன்னார்.

மொழிப் பிரச்சினையில் மூன்று கோணங்கள்!

கடந்த மாதம் 29-ம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில், பெருமைக்குரிய எங்கள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியைச் சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

மொழிப் பிரச்சினையின் மூன்று கோணங்களைச் சுட்டி அவர் பேசியது இதுதான்:—

"பல மொழிகள் வழங்கும் இந்தியா போன்ற நாட்டில், ஒரு தனி மொழி நாடு முழுமைக்கும் இணைப்பு மொழி ஆவது இயலாது.

இரண்டாவது — இந்தியைத் தனி இணைப்பு மொழி நிலைக்கு உயர்த்துவது இந்தி பேசாத மக்களுக்கு இழைக்கப்படுகிற அநீதி ஆகும்.

மூன்றாவது—எந்த ஒரு பகுதி மக்களுக்கும் சொந்தம் என்று சொல்லமுடியாத ஆங்கிலம், இப்போது பொது மொழியாக இருக்கிறது; அது இணைப்பு மொழியாகத் தக்க தகுதி உள்ளது."

அதுதானா, சங்கதி?

"இலாகா ஊழியர்கள் அனைவரும், இந்தி மொழியில் வேலை பார்க்கும் அளவுக்கு அந்த மொழியைக் கற்றுக்கொள்ளும் வரையில், இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்பு வேலை நடைபெற்றுவரும்"

என்று மக்களவையில் உள்துறையமைச்சர் சவாண் பேசிப் பொரிந்து கொண்டிருந்தபோது, கழக உறுப்பினர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இடைமறித்து,

"இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்த ஊழியர் ஒருவர் தமது பணியை இந்தியில் நடத்திச்செல்லத் தகுதி பெற்றுவிட்டார் என்று நிர்ணயிப்பது எப்படி? நிர்ணயிப்பவர் யார்?"

என்று கேட்டார்; அதற்குப் பதிலளித்த சவாண்,

"ஏன்—சாதாரணமாக அந்த இலாகாவின் தலைமை அதிகாரியாகத்தான் இருப்பார்"

என்று பதிலளித்திருக்கிறார்.

அப்படியானால், இனி, அரசாங்க இலாகாத் தலைவர்கள் அவ்வளவு பேரும், இந்தி மொழி பேசுபவர்களாகத்தான் இருப்பார்களா?

முகவுரை

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தி மொழித் திணிப்பு மசோதா, அதிவிரைவிலேயே காலாவதியாகிப் போய்விடும்"

என்பதற்கு அது நிறைவேறிய சற்று நேரத்திலேயே அறிகுறியை காண்பித்துக் கொண்டது!

கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்ற கட்சிகளைச் சார்ந்தோரும்,

மசோதாவின் அடிப்படையான நோக்கமே மாறுபடும் வகையில் திருத்தங்கள் புகுத்தப்பட்டிருப்பதால், உறுப்பினர்கள் சரிவரப் பரிசீலனை செய்து புரிந்துகொள்ளும் முறையில் மசோதாவின் மூன்றாவது வாசிப்பான இறுதிக் கட்டம் திங்கட்கிழமைக்குத் தள்ளிப் போடவேண்டும்'

என்று கேட்டுக் கொண்டனர்!

அவர்களுடைய கோரிக்கையை ஏற்க மறுத்த துணை அவைத் தலைவர் கடில்கார்,

திங்கட்கிழமை வரையில் மசோதாவை தள்ளிப்போட வேண்டிய அவசியமில்லை; பணம் சம்பந்தப்பட்ட மசோதாக்களும், கம்பெனிகள் சம்பந்தப்பட்ட மசோதாக்களும் ஒரே நாளில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு அன்றே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; ஆகவே, இந்த மசோதாவையும் அதேபோல் இன்றே நிறைவேற்றலாம்"

என்று சொல்லியிருக்கிறார்.

நாட்டின் ஒற்றுமையைக் காப்பதற்காகவும், நாட்டின் தன்மானத்தைப் பேணுவதற்காகவும், மக்களிடையே சுலபமான கொடுத்தல்—வாங்கல்களை உருவாக்கவும், அகில உலகமும் நம்மை மதிப்பதற்காகவும் கொண்டுவரப்படுவதாக ஏக களேபரத்துடனும், பெரும் விளம்பரத்துடனும் புகுத்தப்பட்டமசோதா, பணம் சம்பந்தப்பட்ட மசோதாவுக்கு நிகராக மிகச் சாதாரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பணம் சம்பந்தப்பட்ட மசோதாக்களுக்கு சாதாரணமாக நீடித்த--நிலைத்த மதிப்பு இருபபதில்லை!

மொழி மசோதாவையும் அவ்வாறே காங்கிரசார் நினைத்தார்களோ என்னவோ—தென்னகம் அதற்குக் கொடுக்கும் மதிப்பும் அவ்வளவே!

திருவாக்கு!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

நேருவை நம்பி, இந்தி பேசாத பகுதி மாநில மக்கள் தேடிக்கொண்ட 'பெருமை'யை, இனி, சவாண் இந்திரா காந்திகளை நம்பிக் குதியாட்டம் போடும் இந்தி மாநிலத்தவரும், அடுத்து வரும் நாட்களில் அடையத்தான் போகிறார்கள்!

என்று கூறுகிறது

மொழி மசோதாவின்படி இனி

காலமெல்லாம் மாடுகளையோ, பன்றிகளையோ குட்டைகளில் குளிப்பாட்டிக் கொண்டிருந்துவிட்டு இந்தி மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர், மத்திய வேலை வாய்ப்புத் தேர்வின்போது வந்து 'ஆஜர்' ஆகலாம்.

ஆனால்,

இந்தி பேசாத மாநிலத்தவர் இப்போதுபோல் கல்லூரிக்குச் சென்றிருக்க வேண்டும்; இந்தியில் எழுதி அரைகுறையாக, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட வினாத் தாளுடன் மல்லுக்கு நிற்க வேண்டும்!

அப்போதும், இந்தித் தாளுக்கு இந்தியில் எழுதப்பட்ட விடைக்குச் சமதையாக மொழிபெயர்ப்புத் தாளுக்கு—ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விடை இருக்க வேண்டும்.

யாருக்கு வந்தது யோகம்? எவருக்குப் பாடப்பட்டது மங்களம்!

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

19--12--67

திருவொற்றியூர்

அண்ணா நற்பணி மன்றத் திறப்பு விழா; மாலை 7 மணிக்கு காலடிப்பேட்டை மேற்கு மாட வீதியில்; தலைவர்: வெள்ளைச்சாமி; மன்றத் திறப்பாளர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி; பேசுவோர்: அ. பொ. அரசு எம்.எல்.ஏ., ஜீவாகலைமணி பி.ஏ., ம. அரசு பி.எஸ்சி., அன்புக் கண்ணன், வை. பார்த்தசாரதி, டி. எம். இரத்தினம் எம்.சி., வரதராசன் எம்.சி., டி. கே. பழனிச்சாமி எம்.சி., கோவிந்தசாமி எம்.சி., எஸ். கண்ணப்பா.

குழுக் கூட்டம்

"மன்னார்குடி வட்ட தி.மு.க. குழுக் கூட்டம், 20—12—67 மாலை 3 மணிக்கு வட்டச் செயலாளர் இல்லத்தில் நடைபெறும்; கழக வளர்ச்சி குறித்து ஆராயப்படும்" என்று, வட்டச் செயலாளர் கு. பாலகிருட்டினன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை, 18 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)